அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 10/92

அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம் - கொழும்பு. 7
1992, மார்ச்சு 03 மாதம், ஆந் திகதி

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் பிரதான செயலாளர்கள்,
மாகாண ஆளுநர்களின் செயலாளர்கள்,
திணைக்களங்களின் தலைவர்கள்,
அரசாங்க அதிபர்கள் அனைவருக்கும்.

அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை அறிவுறுத்துரைகளைக் கடைப்பிடிக்காமை.

1991.07.14ஆந் திகதியிட்ட 28/91ஆம் இலக்கத்தையும் 1991.07.27ஆந் திகதியிட்ட 38/91ஆம் இலக்கத்தையும் 1991.12.13 ஆந் திகதியிட்ட 59/91ஆம் இலக்கத்தையும் 1991.12.25ஆந் திகதியிட்ட 60/91ஆம் இலக்கத்தையும் கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளுக்குத் தங்களுடைய கவனம் கோரப்படுகின்றது.

02. சில அமைச்சுகளும் திணைக்களங்களும் அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை அறிவுறுத்துரைகளைக் கடைப்பிடிக்காததன் காரணமாக 1992, சனவரி 29ஆந் திகதியன்று நடத்தப்பட்ட அமைச்சரவை கூட்டத்தில் தொடர்புடைய உத்தியோகத்தர்களுக்கு, இது தொடர்பில் குறித்த அறிவுறுத்துரைகளை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

03. அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகள் தாபன விதிக்கோவையில் அடக்கப் பெற்றுள்ள விதிகளையும் ஒழுங்கு விதிகளையும் தெளிவுப்படுத்துவதற்காகவும் அவற்றிற்கான திருத்தங்கள் எவற்றையும் அறிவிப்பதற்காகவும் காலத்துக்குக் காலம் வெளியிடப்படுகின்றன. தாபன விதிக்கோவையிலுள்ள ஒழுங்கு விதிகளையும் அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளிலுள்ள அறிவுறுத்துரைகளையும் தங்களுடைய அமைச்சும் அதன் கீழுள்ள திணைக்களங்களும் நிறுவனங்களும் கண்டிப்பாகக் கடைப்பிடித்து அவற்றை நடைமுறைப்படுத்துவதை உறுதிப்படுத்துவது தங்களுடைய பொறுப்பாகும். இந்த நடவடிக்கை முறை ஒழுக்காற்றுப்படுத்தப்பட்டதும் திருப்திகரமானதுமான அரசாங்க சேவையைப் பேணுவதற்கு அத்தியாவசியமானதாகும்.

04. அரசாங்க உத்தியோகத்தர்கள் அனைவரும் ஒரு சேவை நிபந்தனையாக இந்த ஒழுங்கு விதிகளினால் கட்டுப்படுத்தப்பட்டிருப்பதனால் தாபன விதிக்கோவையிலுள்ள விதிகள், ஒழுங்கு விதிகள், நிதி ஒழுங்கு விதிகளையும் காலத்துக்குக் காலம் வெளியிடப்படும் எந்த சுற்றறிக்கை அறிவுறுத்துரைகளையும் கடைப்பிடிக்க மறுக்கும் உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது தங்களுடைய பொறுப்பாகும் என்பதைத் தயவு செய்து கவனத்திற் கொள்ளவும்.

05. எனவே, இச்சுற்றறிக்கையின் பொருளடக்கம் கண்டிப்பாகக் கடைப்பிடிக்கப் படுவதைத் தயவு செய்து உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

ஒப்பம்: எம். என். ஜுனைட்.
செயலாளர்,
அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு.